சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 05.01.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 126/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-6 |
| சாட்சியின் பெயர் | : | செங்குட்டுவன் |
| தந்தை பெயர் | : | செல்லையன் |
| கிராமம் | : | பைங்காநாடு |
| தாலுக்கா | : | மன்னார்குடி |
| தொழில் | : | கூலி வேலை |
| வயது | : | 35 |

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 05 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு. G. சுப்பையன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரி வழக்கறிஞர் ஆஜரில்லை.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கு விவரம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் எதுவும் என்னுடையது அல்ல.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

**அரசு தரப்பு விசாரணை தொடர்ச்சி**

போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றும், அப்போது போலீசாரிடம் கடந்த 04.06.2025 ஆம் தேதி மன்னார்குடி துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் அ.சா-1 கஜேந்திரன் கொடுத்த புகாரின் பேரில் பைங்காநாடு மது கடை அருகில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தாரகள் என்றும், பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாவும், அதில் நானும் லெனின் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி எங்கள் ஊரை சேர்ந்தர் என்பதால் உண்மையை மறைத்து நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M
Digitally signed by VADIVEL M
Date: 2026.01.05 17:45:23 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.